# இன்று பொதுக்காலம் இருபதாம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு A (17-08-2014)

## திருப்பலி முன்னுரை

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தாம் விடுத்த அழைப்பையும் கொடுத்த அருள்கொடைகளையும் திரும்பப் பெற்றுக் கொள்ளாத இறைவனின் சந்நிதானத்தில் நன்றி செலுத்த ஒன்று கூடியுள்ளோம். நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும்: இன்று பொதுக்காலம் இருபதாம் ஞாயிறு. திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம்.

நான் வழங்கும் விடுதலை அண்மையில் உள்ளது: நான் அளிக்கும் வெற்றி விரைவில் வெளிப்படும். என்னும் மகிழ்வுச் செய்தியை ஆண்டவர் இன்று மீளவும் நமக்கு வழங்குகின்றார். துன்பங்களாலும், துயரங்களாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் இது ஒரு பெரும் ஆறுதலாக அமைகின்றது. ஆகையால், கடவுளே! எம்மீது இரங்கி, எமக்கு ஆசி வழங்குவீராக! உம் திருமுக ஒளியை எம்மீது வீசுவீராக! அப்பொழுது, உலகம் உமது வழியை அறிந்துகொள்ளும்; பிற இனத்தார் அனைவரும் நீர் அருளும் மீட்பை உணர்ந்து கொள்வர். என்னும் வேண்டுதலை இறைவனிடம் சமர்ப்பித்து ஆறுதலைப் பெற்று மகிழ அவரிடம் மன்றாடுவோம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.*

### நிறை வாழ்வை வாக்களிக்கும் அன்புத் தந்தையே இறைவா!

*எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: ஆண்டவராம் இறைவன் நீர் உரைப்பதைக் கேட்டு, ஆண்டவராம் உமக்காக அவர்கள் ஆவலுடன்காத்திருந்து: உமது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருந்து. உமது வார்த்தைகளை தமது வாழ்வின் வார்த்தைகளாக்கி வாழ வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

### அன்பின் திருவுருவே இயேசுவே,

*கனானியப் பெண்ணின் நம்பிக்கையைப் பாராட்டிய உம்மைப் போற்றுகிறோம். மனந்தளராமல், நம்பிக்கையுடன் மன்றாட வேண்டும் என்பதற்கு மாதிரியாகத் தந்த அந்தத் தாய்க்காக நன்றி கூறுகிறோம். நாங்களும் எந்த சூழ்நிலையிலும் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மையே பற்றிக்கொள்ள எங்களுக்கு வரம் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

### என்றென்றும் பேரன்பை நிலையாகக் கொண்டுள்ள தந்தையே!

*நாங்கள் ஒவ்வொருவரும், உமது வழியை அறிந்துகொண்டும், நீர் அருளும் மீட்பை உணர்ந்து கொண்டும், உம்மீது உறுதியான விசுவாசம் கொண்டும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

### எங்கள் தந்தையாகிய தந்தையே!

*துன்பங்களாலும், துயரங்களாலும், வறுமையாலும் வாடிக்கொண்டிருக்கும் அனைவர்மீதும் இரங்கி, ஆசி வழங்கி, உம் திருமுக ஒளியை அவர்கள்மீது வீசி அமைதியையும், மகிழ்ச்சியையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

### கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

### அனைவருக்கும் இரக்கம் காட்டு அன்புத் தந்தையே இறைவா!

*எம் இளைஞர்கள் அனைவர்மீதும் உமது நிறை ஆசியை வழங்கி! அவர்களை உமது அன்பின் ஆழுகைக்குள் வைத்துக் காத்து வழிநடாத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*